**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2016**

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மேலும் பல்கலைக்கழகங்கள் அதிகாரசட்டகத்தின் 108(II) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று பல்கலைக்கழக உப வேந்தருக்கு 2017 யூலை 17 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணக்கம்

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 1,123,900,383 கிரயத்தில் பல்கலைக்கழகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் இந்த நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் அவற்றின் பாவனைக் காலத்தை மீளாய்வுசெய்து மாற்றங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2012 இலிருந்து தொங்கல் கணக்கிலுள்ள ரூபா 333,885 ஆன மீதியை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டுள்ளதுடன் எனது முன்னைய கால அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. சபையின் அங்கீகாரத்துடன் மிகக் குறுகிய காலத்தில் இந்த விடயத்தை சரிசெய்வதற்கு 2014 ஆகஸ்ட் 22 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு (கோப்) கூட்டத்தில் உப வேந்தர் உடன்பட்டிருந்த போதிலும் 2017 ஆகஸ்ட் 15 வரையிலும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

ரூபா 330,301,496 பெறுமதியான நூலக புத்தகங்களின் மெய்மையாய்வு அறிக்கை 30 வருடமாக கணக்காய்விற்கு சமப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏழு ஆண்டுகளிற்கு மேலாக நிதிக்கூற்றுக்களில் நிலுவையாகவிருந்த இடர்கடன் ரூபா 1,318,007 பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காது நிதிகூற்றுக்களில் பெறவேண்டியவையாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 9,947,589 தொகையான வெவ்வேறு தரப்பினர்களிற்கு செலுத்தப்பட்ட பின்வரும் முற்பணங்கள் ஏழு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்த முற்பணங்கள் 2017 யூலை 31 வரை இந்த முற்பணங்கள் சம்பந்தப்பட்டவர்களால் பல்கலைக்கழகத்திற்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

| **சம்பந்தப்பட்டவர்களின் பெயர்** | **முற்பணத் தொகை** | **நிலுவையாகவுள்ள காலம்** |
|---|---|---|
| | **ரூபா** | **ஆண்டுகள்** |
| கட்டிடத் திணைக்களம் | 979,575 | 5 |
| நல்லூர் பிரதேச சபை | 204,104 | 3 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 101,000 | 3 |
| இலங்கை தேசிய நடுநிலை நிலையம் | 10,000 | 4 |
| உதவி பதிவாளர்இ விவசாயம் | 46,050 | 1 |
| நிதியாளர் பேராதனைப் பல்கலைக்கழகம் | 1,713,600 | 1 |
| புத்தக சஞ்சிகை வழங்குனர் | 6,893,260 | 6 |
| | **9,947,589** | |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்** | |
| நிதிப் பிரமாணம் 272 (1) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சம்பந்தப்பட்ட மாதத்தின் முடிவிலிருந்து குறைந்தது ஆறு கிழமைகளிற்கு மேற்படாமல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எப்படியாயினும் உறுதிச்சீட்டுக்கள் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப் பிரமாணம் 756 | 2016 ஆம் ஆண்டுகளிற்கான கையிருப்பு மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட 120 பற்றாக்குறை மற்றும் 274 மேலதிகமும் உள்ள கையிருப்பு விடயங்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்** | |
| 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை. | எல்லா வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஆகக்குறைந்தது 06 மாதங்களிற்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 17 வாகனங்கள் தொடர்பில் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 3 நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 141,526,367 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 197,158,693 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 55,632,326 ஆன மேலுமொரு பின்னடைவினை சுட்டிக்காட்டுகின்றது. இந்த பின்னடைவுக்குப் பிரதான காரணங்களாக ஆளணி வேதனங்கள், பராமரிப்புச் செலவினங்கள், ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களின் அதிகரிப்பு என்பன இருந்தன.

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் ரூபா 197,158,693 பற்றாக்குறையை விளைவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்கள்இ அரசாங்கத்திற்கு செலுத்திய வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 1,846,352,464 என்பன அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான பெறுமதிச் சேர்க்கையில் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும் போது ரூபா 342,592,161 அல்லது 23 வீதமான ஆன முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

#### (அ) பரீட்சைப் பெறுபேறுகள்

1995 யூலை 14 இன் 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், பரீட்சை நடைபெற்ற பின்னர் மூன்று மாதங்களிற்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களின் கீழ் நடாத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளிற்கான பரீட்சைகள் நடைபெறுவதற்கான திகதிகள் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இலக்கிடப்பட்ட திகதிகள் என்பன நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது விவசாய, கலைகள், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக, விஞ்ஞான பீடங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு என்பவற்றால் பரீட்சைப் பெறுபேறுகளை விடுவிப்பதில் 04 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரையிலான வீச்சில் கருத்திற்கொள்ளக்கூடிய காலதாமதங்கள் இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. ஆதலால், மாணவர்கள் உரிய நேரத்தில் அவர்களுடைய வேலைவாய்பிற்கான சந்தர்ப்பங்களை பெறுவதற்கு முடியாதிருந்தது. இந்த விடயம் என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பெபேறுகளை வெளியிடுவதற்கு உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

### 4.2.1 நூலக நிர்வாகம்

மந்தமான கட்டுப்பாடு காரணமாக முன்னைய வருடங்களில் கட்டளையிடப்பட்ட ரூபா 66,769 மற்றும் ஐ.அ.டொலர் 5,340 பெறுமதியான பருவ வெளியீடுகள் 31 மார்கழி 2016 வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப்பரிசிலில் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் 74 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்கள் பூர்த்தியடைந்த பின்னர் கடமைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், உடன்படிக்கைகளை மீறியமைக்காக அவர்களிடமிருந்து பல்கலைக்கழகம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 71,000,000 கூட்டுத்தொகையான பிணைமுறியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 3,150,000 கிரயத்தில் வெளியில் வழங்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் தயாரிப்பிற்கான ஒப்பந்த உடன்படிக்கையொன்று 2013 திசெம்பர் 01 இல் 90 நாட்களில் முடிவுறுத்தப்படும் என்ற உடன்பாட்டில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்த வேலைகள் குறித்த காலத்தில் நோக்கெல்லை மற்றும் கிரய முரணின் மாற்றங்கள் காரணமாக பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் ஒப்பந்ததாரருக்கு முறையான வழிகாட்டல்கள் வழங்க தவறியிருந்ததுடன் முறையான மதிப்பீடு மற்றும் எவ்வித தாமத கட்டணமும் தாக்கல் செய்யப்படாமல் பூர்த்தியாக்கல் காலப்பகுதி 10 தடவைகள் மீளாய்வு செய்யப்பட்டிருந்தது.

(இ) புதிய கட்டளையிடும் போது பொருட்களின் தேவைப்பாடு மற்றும் இருப்பின் அளவு என்பவற்றை பல்கலைக்கழகம் கவனத்தில் எடுக்காமையால் ரூபா 207,014 க்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பயன்பாடற்று காணப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழகமானது அறக்கொடை புலமைப் பரிசில் கொடுப்பனவு தொடர்பாக மாணவர்களுக்கு தகவல் வழங்க தவறியிருந்தது. இதன் விளைவாக ரூபா 83,200 பெறுமதியான அறக்கொடை புலமைப்பரிசில் காசோலைகள் 111 மாணவர்களுக்கு எழுதப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்கப்படவில்லை.

(உ) முற்பண கொடுப்பனவுக்கான உயர்ந்தபட்ச எல்லைஇ முன்னைய முற்பண தீர்பனவு காலம் என்பன தொடர்பில் பொருத்தமான மதிப்பீடு செய்யாமல் வேறுபட்ட அலுவலர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டமையாலும் முற்பண கட்டுபாடு மீதான பலவீனத்தாலும் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்வதில் குறிப்பிடத்தக்களவு கால தாமதம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலங்கை மின்சார சபைக்கு 2004 ஆம் ஆண்டில் ரூபா 163,653 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 30 ஆவணி 2017 வரை மின்சார சபையால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் மூதவை அங்கீகாரத்துடன் அவ் முற்பணம் பதிவளிப்பு செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என பல்கலைக்கழக உபவேந்தர் கூறியுள்ளார்.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் சட்ட திணைக்களத்தில் ஏற்பட்ட ரூபா 213,000 பெறுமதியான இழப்பிற்கு ஆரம்ப கட்ட விசாரனை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டு தீர்க்கப்படாத விடயங்கள்

(அ) அனைத்துப் பதவியணியினரும் கைவிரல் அடையாள ஸ்கானரில் தங்களது உள்வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்களை பதிவுசெய்ய வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்கள் கைவிரல் அடையாள ஸ்கானரில் தங்களது உள்வருகைகள் மற்றும் வெளிச்செல்லல்களை பதிவுசெய்வதற்கு மறுத்திருந்தனர். இது தொடர்பில் 2014 ஆகஸ்ட் 22 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவில் பல்கலைக்கழகத்திற்கு இணைக்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரின் வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டுமென நெறிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நெறிப்படுத்தல் இவ் அறிக்கை திகதி வரை பல்கலைக்கழகத்தால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. இவ் விடயம் 2012 இருந்து கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் ரூபா 104,220 பெறுமதியான மடிக்கணனியொன்று இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், பல்கலைக்கழகத்தால் நட்டங்களின் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டதுடன் சபை தீர்மானத்தின் அடிப்படையில் தொடர்புபட்ட உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 115,800 முழுமையான பதிலீட்டுக் கிரயத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 யூலை 31 வரையிலும் உத்தியோகத்தரிடமிருந்து நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சங்கீதப் பிரிவின் டிஜிற்றல் கற்கை காப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த ரூபா 140,000 பெறுமதியான இரண்டு தனிப்பட்ட கணனிகள் 2014 ஏப்ரல் 28 இல் காணாமல் போயிருந்தன. இது தொடர்பில் ஆரம்ப விசாரணையை நடாத்துவதற்கு உப வேந்தரால் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் ஆரம்ப விசாரணைகளை நடாத்துவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) விவசாய பீடத்திற்கு பல்கலைக்கழக மானிய நிதியேற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட பீடாதிபதியின் அலுவலகத்திற்குச் சொந்தமான ரூபா 98,700 பெறுமதியான பல்லூடகத் தெறிப்பான் 2015 பெப்ரவரி 13 அளவில் இரண்டாம் ஆண்டு விரிவுரை மண்டபத்திலிருந்து காணாமல் போயிருந்தது. இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் விவசாய பீடாதிபதி நட்டம் தொடர்பில் ஒரு மாதத்திற்குள் அறிக்கையிடத் தவறியிருந்தார். ஆரம்ப விசாரணைக்காக சபையால் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 31 வரை நட்டத்தை அறவிடுவதற்கு பல்கலைக்கழகத்தால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்லுடக தெறிப்பான் ஒன்று 07 ஆவணி 2015 இல் விஞ்ஞான பீடத்தில் காணமல் போயிருந்தது. இது தொடர்பில் 31 ஆடி 2017 வரை பல்கலைக்கழகத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது 2016 திசெம்பர் 31 அளவில் கல்விசாரா பதவிகளில் நிலவிய 180 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் 7 பீடங்களில் பேராசிரியர், இணைந்த பேராசிரியர் பதவி போன்ற பிரதான கல்விசார் பதவிகளில் 142 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் பல்கலைக்கழகமானது அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் வவுணியா வளாகத்திற்கான கல்வி பதவியணியினர் மற்றும் கல்வி சாரா பதவியணியினர் தரத்திலுள்ள 73 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கதவறியிருந்தது.

(இ) முப்பது பயிற்சிபெறும் முகாமைத்துவ உதவியாளர்கள் 1997 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 124 ஆம் இலக்க பொது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையிற்கு முரணான முறையில் 05 ஆண்டுகளுக்கு மேலாக பல்கலைக்கழகத்தின் கல்விசாரா பதவியணியின் நிரந்தர பதவிகளின் கடமைகளிற்காக வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

## 4.7 சொத்துக்கள் முகமைத்தவம்

### 4.7.1 பயன்பாடற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் தொகுதி "சீ" கட்டடத் தொகுதியின் விரிவுரை மண்டப கட்டுமானத்துக்கு என பல்கலைக்கழகத்தால் ரூபா 64,429,531 செலவிடப்பட்டிருந்தது. 2015 மே 31 இல் பூர்த்தி செய்யப்பட்ட கட்டுமான வேலை பல்கலைக்கழகத்துக்கு 2015 யூலை 23 இல் கையளிக்கப்பட்டிருந்த போதும் கட்டடத்தின் பெரும்பகுதிகள் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது பயன்பாடற்று விடப்பட்டிருந்தது.

(ஆ) பயன்பாடற்றஇ பயன்படுத்த முடியாத மற்றும் மெல்ல நகரும் பொருட்கள் முறையே ரூபா 234,975, ரூபா 1,320,659 மற்றும் ரூபா 325,409 பெறுமதியானவை பல்கலைக்கழக களஞ்சியம் I மற்றும் II இல் மீளவும் பயன்படுத்தப்படாது 02 தொடக்கம் 18 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதியில் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் இது தொடர்பில் அவற்றைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 பெறுகை நடைமுறைகளுடன் இணங்குதல்

மீளாய்வாண்டின் போது அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், கட்டிடங்கள், புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள், மேலங்கிகள், தொலைபேசி பரிவர்த்தனைகள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றின் கொள்வனவிற்காக ரூபா 1,118,964,032 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை கைநூலின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம், விபரமான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம், ஆகக்குறைந்தது மூன்று ஆண்டு காலப்பகுதிக்காக உத்தேசிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகை திட்டத்தில் பட்டியலிடப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான பெறுகை நடவடிக்கைகளை மாத்திரம் பட்டியலிட்டிருந்தது.

(இ) பிரதான பெறுகை திட்டத்தில் 07 ஆம் இலக்கம் தொடக்கம் 13 ஆம் இலக்கம் வரை குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கான இலக்கிடப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதான கொள்வனவு திட்டம் உயர் கல்வி அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.2 ஆம் பிரிவின் பிரகாரம், காலவரிசை முறை, ஆரம்பித்தல் புள்ளியிலிருந்து அதன் பூர்த்தியாக்கல் வரை ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் படிமுறைகள் என்பவற்றின் விபரிப்பதன் மூலம் கொள்வனவு நேரப் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கால அட்டவணை மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட கொள்வனவு நடவடிக்கையின் படிமுறைகள் என்பன பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பல்கலைக்கழகம் 2010 மார்ச் 10 ஆம் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான தொடர் நடவடிக்கைகள்

2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதிலளிப்பதற்கு பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுத்திருக்கப்படவில்லை.

## 6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடய பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு விடய பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) சொத்து முகாமைத்துவம் | நட்டமடைந்த பொருட்கள் மீது முறையான நடவடிக்கை எடுத்திருக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நூலக நிர்வாகம் | கடந்த 30 ஆண்டுகளாக நூலக புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | களஞ்சிய பொருட்களை முறையாக பேணுவதற்கு முகாமைத்துவத்தால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) ஒப்பந்த நிர்வாகம் | விடுதி I மற்றும் II ரூபா 196,427,614 கிரயத்தில் கட்டப்பட்டு பல்வேறு குறைபாடுகளுடனும் 100 முதல் 400 நாட்கள் வரையான கால தாமதத்திடனும் முடிவுறுத்தப்பட்டு பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்ருந்ததுடன் தாமத முடிவுறுத்தலுக்கான முறையான மதிப்பீடு செய்யப்படாமல் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | பெறுவனவுகளும் கொடுப்பனவும் | மீதிகளை அறவிடுவதிலும் தீர்ப்பனவு செய்வதிலும் தாமதம் காணப்பட்டது. |
| (ஊ) | மனிதவள முகாமைத்துவம் | கல்விசார் மற்றும் கல்விசாரா பதவி வெற்றிடங்களை நிரப்ப பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | முற்பணம் மீதான கட்டுப்பாடு | பல்கலைக்கழகத்தால் முற்பணம் மீதான உரிய மேற்பார்வையும் கட்டுப்பாடும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | வாகன ஓட்ட முகாமைத்துவம் | நாளாந்த ஓட்ட அட்டவணையில் பயண நோக்கம், எரிபொருள் கட்டளை இலக்கம், திகதி மற்றும் எரிபொருள் சிட்டை இலக்கம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |